**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.53/2019**

2024-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திருமதி.விஜயா, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திருமதி.பெ.சீதாதேவி, மூன்றாம் நிலை மேசை எழுத்தர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | திருமதி.விஜயா. |
| வயது | - | 60 |
| தந்தை/கணவர் பெயர் | - | திரு.செல்வமணி |
| கிராமம் | - | வெள்ளாஞ்சேரி |
| வட்டம் | - | |
| சாதி | - | |
| சமயம் | - | |
| தொழில் | - | |

03.09.2024

வா.சா.1.

எனக்கு சொந்த ஊர் உக்கல் பெண்டை கிராமம். நான் தாக்கல் செய்த தாவாவில் உக்கல் பெண்டை என்று எனது முகவரியை குறிப்பிட்டுள்ளேன். திருத்த தாவாவிலும் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். நான் வேலைக்காக சென்றுள்ள இடம்தான் வெள்ளாஞ்சேரி. சுமார் 10 வருடங்களாகதான் அங்கு சென்றுள்ளேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு உக்கல் பெண்டையில் அரசாங்க இடத்தில் வீடு கட்டிக்கொண்டு இருந்தோம். சுமார் 20 வருடமாக இருந்தோம். 10 வருடங்களுக்கு முன்பு உக்கல்பெண்டையில் அரசாங்க இடத்தில் ஓலை வீடு கட்டி வசித்து வந்த விவரத்தை எனது தாவாவிலோ எனது பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் அந்த விவரத்தை சொன்னேன். எனக்கு எழுத

படிக்க தெரியாது. நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை, அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடன் தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ள மார்கபந்து எனது அண்ணன். அவர் செய்யாரில் குடியிருக்கிறார். எனது தாயாருக்கு சொந்த ஊர் சித்தாமூர். எனது கணவரின் சொந்த ஊர் உக்கல் பெண்டை கிராமம் தான். பட்டா என் கணவர் பெயருக்கு வழங்கப்பட்டபோது உக்கல்பெண்டையில் எந்த இடத்தில் வசித்தார் என்று கேட்டால் குறிப்பிட்டு தெரு பெயர் எதுவும் இல்லை, உக்கல் பெண்டை என்பது ஒரே இடம்தான்.

பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.